IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# சங்க மகளிருக்கிருந்த கட்டுப்பாடுகள்

**ஜெ.அம்பேத்கர்,**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி),
திருச்சிராப்பள்ளி-620 020.

**முனைவர் மு.சாதிக் பாட்சா**
இணைப்பேராசிரியர்,
முதுகலை & தமிழாய்வுத்துறை,
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி),
திருச்சிராப்பள்ளி- 620 020.

**ஆய்வுச் சுருக்கம்**

சங்கம் வைத்துத் தமிழ் வளா;த்தக் காலத்தையே நாம் சங்க காலம் என்கிறோம். சங்கக்காலம் என்பது கிட்டத்தட்ட 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டது. எனவே, அன்றைய காலக்கட்டத்தில் மானுட சமூகத்தில் சரிபாதியாக இருந்துவரும் மகளிர் எத்தகைய கட்டுப்பாடுகளை எதிர்கொள்ள நேர்ந்தது என்கிற நோக்கத்தை அடிப்படையாககொண்டு இந்த “சங்க மகளிருக்கிருந்த கட்டுப்பாடுகள்” எனும் கட்டுரைப் படைக்கப்பட்டுள்ளது.

கட்டுரையின் மூலாதாரமாகச் சங்கக்கால நூல்களான தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவை எடுத்துக்கொள்ளப்பட்டது. சங்க காலத்தில் மகளிருக்கிருந்தக் கட்டுப்பாடுகளைத் தொகுத்துக் கூறியதற்கான சான்றாதாரங்களும் கட்டுரையின் முடிவில் தொகுப்புரையும், முடிவுரையும் அதையடுத்து சங்க நூல்களிலிருந்து பயன்படுத்தப்பட்டிருக்கும் ஆதாரங்கள் அடிக்குறிப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**முன்னுரை**

சங்ககாலப் பெண்கள் தான் வாழ்ந்து வந்த குடும்பம் என்கிற கட்டமைப்பு ரீதியாகவும் தான் சார்ந்திருந்த சமூகம் ரீதியாகவும் எத்தகைய நிலையில் நடத்தப்பட்டார்கள். அவர்களுக்கான உரிமைகள் கல்வியில் வாய்ப்பு, பொருளாதார சூழல், அதிகார வரம்பு மற்றும் கணவன் சார்ந்த பங்களிப்பின் பின்னால் அவர்கள் சந்தித்த இன்னல்களை இக்கட்டுரையில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

**சங்க மகளிர்**

சங்க காலத்தில் குடும்பம் என்னும் சமுதாய அமைப்பில் மகளிருக்குப் பகுக்கப்பட்ட தொழில்முறைகள் இல்லம் சார்ந்தது. ஆண்களுக்கும் பகுக்கப்பட்ட தொழில்முறைகள் இல்லத்திற்குப் புறம்பானது. மகளிர் பாலியல் வேற்றுமைக்க காரணமாக வேறுபடுத்தப்பட்டு, விலக்கப்பட்டு வரலாற்றில் கொஞ்சம் கொஞ்சமாக ஒடுக்கப்பட்டு கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டு வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆணும், பெண்ணும் சமம் என்று சொல்லப்படுகிற நிலையில் ஆண்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளும் வாய்ப்புகளும் பெண்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

மகளிருக்குரிய மிக முக்கியமான பண்புகளாக அச்சம், நாணம், மடன், முதலியவையைத் தொல்காப்பியன் குறிப்பிட்டுள்ளார்.

"அச்சமும் நாணும் மடனும்முந் துறுதல்
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப"

மகளிருக்குதான் மனக்குறிப்பின்றித் தோன்றும் நடுக்கம் அச்சம் என்றும் பெண் தன்மையோடு பொருந்தாதப் புறச்செயல்களில் ஈடுப்படாமல் ஒதுங்கி வாழ்தல் நாணம் என்றும் அறிந்தும் அறியாதத் தன்மையினராயிருத்தல் மடன் என்றும் கூறப்படுகிறது.

**பேசுதற்கான எல்லை**

"நாட்டம் இரண்டும் அறிவுடம் பகுத்ததற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்"

இங்கு கூட்டி உரைக்கும் குறிப்புரை என்றது. வேட்கையில் இருவரும் ஒருவருக்கு ஒருவர் கூறிக்கொள்ளும் காமக்குறிப்புச்சொல் இருவரது நாட்டமாகும். பெண் தனது வேட்கையை வாயால் சொல்வது மரபன்று என்னும் கருத்து வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது.

தொல்காப்பியர் இவரிவர் இவ்வகை உவமைக் கூற்றிற்கு உரியர் என்று அவரவருக்கு வரையறை வகுத்துள்ளார். தலைவி உவமைக் கூறுமிடத்து அவளறிந்தப் பொருளைத்தான் உவமையாகக் கூறலாம்.

"கிழவி சொல்லின் அவளறி கிழவி"[3]

"தோழிக்காயின் நிலம் பெயர்ந்து உரையாது"[4]

இதன்மூலம் அறியவருவது என்னவெனில் சங்கத் தலைவியின் இயங்கு வட்டம் மிகக் குறுகியது என்று தெரிய வருகிறது.

**கடற் பயணம்**

"முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை" [5]

தொழிலின் காரணமாகப் பயணம் செய்யும் ஆண்மகன் தன் மனைவியை அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லாதிருந்தக் காரணத்தாலே தொல்காப்பியர் இந்நூற்பாவைப் பதிவுச் செய்திருகிறார்.

**பாசறை**

"எண்ணரும் பாசறை பெண்ணொடும் புணரார்" [6]

போர்க்களத்திற்குச் செல்லும் ஆண்மகன் தன் மனைவியரை உடன் அழைத்துச்செல்லும் போக்கு இருந்திருக்கவில்லை என்கிறார் தொல்காப்பியர்.

**ஆண் மகனைச் சார்ந்திருத்தல்**

"வினையே ஆடவர்க்குயிரே வானுதல்
மனையுரை மகளிக்கு ஆடவர் உயிர்" [7]

சங்க காலத்து ஆண்களுக்கு அவர்கள் மேற்கொண்ட வினையே உயிராக இருக்க, மகளிருக்கு மட்டும் தம் கணவரே உயிராக விளங்குகின்றான் என்பது ஆணின் எல்லைப்பரப்பு அதிகம் ஆனால் மகளிருக்கான எல்லை குறுகி, தன்னுடைய கணவனைத் தாண்டி எதையும் சிந்திகாதச் சூழலைக் காட்டுகிறது.

**கற்பு**

"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்நீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றெனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு" 8

ஒரு பெண்ணின் உயிரைவிட நாணம் சிறந்தது. அந்த நாணத்தைவிட கற்பு சிறந்தது. எனத் தொல்காப்பியர் கூறுகிறார். பெண்ணின் கற்பு தொல்காப்பியம் எங்கும் வலியுறுத்தப்படுகிறது.

மகளிருக்கும் சமூகத்திற்கும் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதன் மூலம் இவ்வாறான சில கட்டுப்பாடுகள் சமூகத்தை வழிநடத்திச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. கற்பு என்னும் சொல் காலந்தோறும் தேவைக்கேற்ப மாறுப்பட்ட பொருளுடன் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. தொல்காப்பியர் முதல் இக்கால அறிஞர்கள் வரை கற்பு என்னும் சொல்லுக்குப் பலவிதமான பொருளும் விளக்கங்களும் தந்து வந்திருக்கிறார்கள்.

பொதுப்பொருளில் பயின்றுவந்தக் கற்பு என்னும் சொல் காலப்போக்கில் ஆண், பெண் உறவினை மட்டும் சுட்டும் வகையில் வழங்கி வருகிறது. ஆணாதிக்கத்துடன் கற்பு இணைக்கப்பட்டதால் வரலாற்றில் பல உண்மைகள் வெளிப்படாமல் போயிற்று.

கற்பு என்னும் பதம் வழங்கி வந்தக் காலத்தில் அது ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இருக்க வேண்டிய உளம் சார்ந்த ஒழுக்கத்தை உள்ளத்து உணார்வை, உள்ளத்து உறுதியைப் புலப்படுத்திக் குறிப்பது புலனாகும் ஆனால் கற்பு என்பதை மீண்டும் மீண்டும் பேசி பெண்கள் மட்டும் அதனை மந்திரமாகவே கொண்டார்கள். இருவருக்கும் பொதுவில் வைத்துக் கற்பை பெண்களுக்கு மட்டும் திணித்துவிட்டு அதனைக் கடந்து ஆண் தன் விருப்பம் போல் கட்டற்ற நிலையில் செயற்பட்டிருப்பது ஆணாதிக்கம் சமூகக் கட்டமைப்பைக்காட்டுகிறது.

**பரத்தைமை**

தலைவியைப் பிறிந்து பரத்தையிற்பாற் ஒழுகும் ஒழுக்கம் தலைவனது தலைமைப் பண்புக்கு இழுக்கானது என்று சங்க காலத்தில் கருதியிருந்தாலும் அதனைத் தடுப்பதற்கான எத்தகைய முயற்சியும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தலைவனுடன் வாழும்வரைதான் மனையாளுக்கு மதிப்பு. தலைவனும் குற்ற உணர்வுடன் தன் வீட்டினுள் திருடன் போல் நுழைவான். தலைவனின் பரத்தைமை ஒழுக்கத்தை வெறுத்து தலைவி தனியே பிறிந்துச் சென்றாலும் அது தலைவனுக்கு எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தாது. பாதிக்கப்படுவது என்னவோ தலைவியும் அவளது குழந்தையும்தான். தலைவனின் பரத்தைமை எத்தனை கொடுமையானலும் தலைவி பிறிந்துப் போவதால் பயனேதுமில்லை என்பதே உண்மை நிலையாக இருந்தது.

**மறுமணம் மறுப்பு**

கணவனை இழந்த மகளிருக்கு மறுமணம் நடந்ததற்கான ஆதாரம் சங்கப் பாடல்களில் இருப்பதாக தொரpயவில்லை. ஒரு பெண் ஒருமுறை மட்டும் மணம் புரியலாம் என்கிற செய்தியைக் கலித்தொகைப் பாடல் ஒன்று வெளிக்காட்டுகிறது.

"அருநெறி ஆயர் மகளிர்க்கு
இருமணம் கூடுதல் இல்லியல் பின்றே"9

கணவனை இழந்தக் கைப்பெண் நிலை

இருபெரும் வேந்தரிடையே நடந்து முடிந்தப் பேரில் இரு பெரும் படையினரும் மாண்டு ஒழிய பெண்கள் தமது கணவன்மாரும் தந்தைமாரும் தமையன்மாகும் மக்களும் வீரமரணம் அடைந்தனர் என்று இறும்பூதெய்துவர்.

போரின் முடிவில் எத்தனைப் பெண்கள் கணவனை இழந்து விதவைகளாயினர். எத்தனை சிறார்கள் தந்தையை இழந்து அநாதைகளாயினர். எத்தனை தாய்மார்கள் புதல்வரை இழந்து இறுதிக்காலத்தில் ஆதரிப்பார் அற்றவராயினர். ஒரு பெரிய போரின் பின் ஓர் ஊரில் இழவு விழாத வீடே காண்பது அறிதாக இருக்கும்.

**மூதானந்தம்**

"கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்

செல்வோள் செப்பிய மூதானந்தம்"[10]

என்பது கணவனுடன் மனைவியும் உடன்கட்டை ஏரியதைக் கண்டோர் இரங்குவத மூதானந்தமாகும்.

**தாபத நிலை**

"காதலன் இழந்த தாபத நிலை"

என்பது காதலனை இழந்தவள் தவம்புரிந்து ஒழுகும் தாபத நிலையாகும். காதலனான கணவன் இறந்தவள் பெண்களின் உணவு உண்ணும் காலம் மாறுகிறது. உண்ணும் உணவு மாறுகிறது. அழகுதரும் எந்த அலங்காரமும் மறுக்கப்படுகிறது. அவளுடைய உணர்வுகளை தூண்டும் எதுவும் மறுக்கப்படுகிறது.

**பாலை சொல் நிலை**

"நல்லோன் கணவனொடு நனி அழல் புகீஇ"12

இறந்துவிட்ட கணவனொடு அவன் உடம்பொடு தீப்புகும் நிலையே பாலை சொல் நிலையாகும்.

**முதுபாலை**

"நனிமிகு சுத்திடைக் கணவனை இழந்து

தனிமகள் புலம்பிய முதுபாறை"[13]

கொடிய பாலைவனத்தில் கணவனை இழந்தப் பெண் தனியாளாய் நின்று தன் தனிமையைக் கூறி புலம்பல் நிலையாகும்.

**தலையொடு முடிந்த நிலை**

"கொண்டோன் தலையொடு முலையும் முகனும்

சேர்த்தி முடிந்த நிலை"14

கணவன் இறந்த நிலையில் அவன் தலையொரு முலையும் முகத்தையும் சேர்த்து மனைவியும் இறக்கும் நிலையாகும்.

**பூதப்பாண்டியனின் பட்டத்தரசி பெருங்கோல்பெண்டு**

ஒல்லையூர் மன்னன் பூதப்பாண்டியன் வாhpசின்றி இறந்தான். பட்டத்தரசி பெருங்கோல்பெண்டுவை அரசுக்கட்டில் ஏறும்படி கேட்ட அமைச்சர்களின் வேண்டுகோளை மறுத்துக் கணவனுடன் உடன்கட்டை ஏறினான். அப்பொழுது அவர் பாடிய பாடல்.

"பல்சான் றீரே! பல்சான் றீரே!

செல்கனச் சொல்லாது ஒழிகென விலக்கும்

பொல்லாச் சு+ழ்ச்சிப் பல்சான் றீரே
துணிவர்க் கொடுங்கோய் வாள் போழ்ந்தட்ட
காழ்போல் நல்வினர் நறுசெய் தீண்டாது
அடைகிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளென் சாரிதொரு புளிப்பெய்து அட்ட
வேளை வெத்தை வச்சி ஆகப்
பறற்பெய் பள்ளிப் பாயின்றி வழியும்
உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கு அரிது ஆகுக தில்ல எமக்கு எம்
பெருந்தோள் கணவன் மாயந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயும் ஓரன்றே"[15]

பல சான்றோரே! பல சான்றோரே! நின் தலைவனொடு இறப்ப நீ போவென்று கூறாது. அதனைத் தவிர்கவென்று சொல்லி என் செயலை விலக்கும் பொல்லாத துன்பத்தையுடைய பல்வேறு சான்றோரே!

வெள்ளரி விதைப் போன்ற நெய்யற்ற நீர்ச் சோறு என்ளுத்துவை, புளி கூட்டி சமைத்த வேளை இலை ஆகியவற்றை உண்டு பாயில்லாமல் பருக்கைக் கற்கள் மேல் படுத்தும் கைம்மை நோன்பு நோற்கும் பெண்டிர் போன்றோர் அல்லயாம், ஈமப்படுக்கை உங்களுக்கு அறிதாகத் தோன்றாம். என் கணவன் இறந்துவிட்டார். ஆதலால் எனக்கு அந்த ஈமத்தீயே தாமரைச் குளத்துத் தண்ணீர் போல் இன்பம் தருவதாகும் என்று நீங்கள் அறிவீர்களாக என்று கூறினால்.

கைம்மையின் கொடுமை பற்றி இப்பாடல் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. ஒரு மன்னன் மனைவியால் இதனை எதிh;த்து முடிவெடுக்க முடியவில்லை என்றால் சாதாரண குடிமக்களான பெண்களின் நிலையை எண்ணி பார்க்க வேண்டும்.

**பொறையுடைமை**

மென்மையான மனத்துடன் பொறுத்துப் போகும் பண்பே பொறையுடைமை எனப்படும். எத்தகயை இன்னல்கள் வாழ்வில் வந்தாலும், தன் நெஞ்சில் கொண்ட துன்பத்தினை வெளியே பிற் அறியப் புலப்படுத்தாமல் தன் நெஞ்சிகுள்ளேயே நிறுத்திக் கொள்ளும். அறிய பண்பினைப் பொறை எனப் பழந்தமிழர் கொண்டனர்.

தலைவனது பரத்தைமையாகிய கொடுமையால் தலைவி துன்புற்றாலும் தலைவன் செய்த குற்றத்திற்கு தலைவியானவள் தான் நாணப்பட்டு அவற்றை வெளிக்காட்டாமல் மறைத்துக்கொள்ளும் சூழல் அன்றைக்கு இருந்திருக்கின்றது.

"யாயா கியளே மாவு யோளே
மடைமான் செப்பிள் நமியம் வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
தன்னந் துறைவன் கொடுமை
நம்முள் நானிக் கரப்பா டும்மே"[16]

தலைவன் பரத்தை வீடு சென்று திரும்பினான். அவன் ஏற்றுக் கொள்ளத்தகாத கொடுமையை உடையவனாக இருந்தாலும் அதனை மனம்நோகாமல், கற்பொழுக்கத்தின் சிறப்பினால் தலைவர் கொடுமையை மறைத்து

அவன் நாணும்படி தலைவி தானே அவனை ஏற்றுக்கொள்ள முன் வருகிறான். என்கிற செய்தியை தோழி வியப்புடன் பேசியதாக இப்பாடல் கூறுகின்றது.

**அதிகார வரம்பு**

அதிகார வாpசையில் தந்தையே இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் உள்ளவனாகச் சங்க இலக்கியங்களில் காட்டப்படுகின்றான். இந்நிலை அளத்தொடு நிற்றல் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. இதுபோன்ற சூழல்களில் தந்தையின் முடிவெடுக்கும் அதிகார நிலைக்கு முன் தாயின் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரம் பாpந்துரை செய்வதோடு மட்டுமே முடிகிறது.

**காதலை வெளிப்படுத்த தடை**

"இடிக்கும் கேளிர் நுங்குறையாக
நிறுக்கல் ஆற்றினோ நன்று மன்
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய் நோன்று கொளற்கு அறிதே"[17]

இரு கரங்களும் அற்ற வாய் பேசாத ஊமன் ஒருவன் மலைப்பாறை மீது வெண்ணெயைக் கண்ணால் காவல் செய்கிறான். வெண்ணய் சூரிய வெப்பத்தால் அவன் கண்ணெதிரே உருகிப் பாறையில் பரந்து கொண்டிருக்கிறது. அதனை உருகாமல் வேறிடத்தில் எடுத்து வைப்பதற்கு அவனுக்குக் கைகளும் இல்லை. பிறரை உதவிக்கு கூவி அழைப்பதற்கு வாயும் இல்லை. வெண்ணெய் உருகிய படர்ந்து கொண்டிருப்பது போலத் தலைவியின் காமநோய் பரவுகிறது.

ஊமன் வெண்ணெயை பாதுகாத்து வைக்கவோ பிறாpடம் கூவி அழைக்கவோ முடியாதது போல், காமநோயை அடக்கிப் பாதுகாக்கவோ பிறரிடம் எடுத்துக் கூறவோ முடியாத ஒரு நிலை என்று வெள்ளி வீதியாற் தலைவியின் காமநோயை உள்குறை வாயிலாக எடுத்துக் காட்டுவதன் மூலம் சங்கக்காலத் தலைவி குறிப்பாலன்றி தன்னுடைய காதலை வெளிப்படையாக சொல்லுதல் என்பது ஒரு குற்றமாகவே கருதப்பட்டு வந்ததை அறிகிறோம்.

**எதிர்க்கொண்டு பார்த்தல்**

"என்னைக்கு ஊரித்து அன்மையானும்
என்னைக்கு நாடித்து அன்மையானும்
ஆடாது என்ப ஒரு சாரோரே
ஆடன்று என்ப ஒரு சாரோரே
நல்ல பல்லோர் இருநன் மொழியே
அஞ்சிலம்பு ஒலிம்ப ஓடி எம்மில்
முழாவரைப் போந்தை பொருத்தி நின்று
யான் கண்டனன் அவன் ஆடாடுதலே"[18]

பெருநற்கிள்ளி ஆமூர் மல்லன் ஒருவனுடன் மல்யுத்தம் செய்கிறான். ஒரு சிலர் அவனுக்குச் சார்பாகவும் வேறு சிலர் அவனுக்கு எதிராகவும் ஆரவறிக்கின்றனர். அனைவரும் அவனை ஆதரிக்காதது நக்கண்ணையாருக்கு எரிச்சலை மூட்டியது. எனவே, இவ்வாறு ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக கூறுவது நன்றாயிருக்காது என்றார் இகழ்ச்சியாக.

அவன் மல்யுத்தம் புரியும் அழகைக் காண விரும்பினாள். ஏதாவது ஒன்றன் மறைவில் நின்று பார்ப்பதே குலமகளின் இயல்பாதலாய் நான் காற்சிலம்பு ஒலிக்க ஓடிப் பனையின் பின்னால் நின்று எனது வளையும் கலையும் தோற்கும் ஆண்மை உடையவனின் வெற்றியை கண்டேன் என்கிறார்.

சங்கக்காலம் பெண் ஒரு ஆண்மகளை நேருக்கு நேர் எதிர் கொண்டு பார்க்கும் வழக்கம் மறுக்கப்பட்டிருக்கின்றது.

**இற்செறிப்பு**

தலைவியின் நடவடிக்கைகளில் உடன் மாற்றங்களில் செவிலிக்கு ஐயம் தோன்றி வலுவாகும் சந்தர்ப்பத்தில் அவளது சுதந்திரம் கேள்விக்குறியாகும். தலைவி இற்செறிக்கப்படுவாள்.

காதல் இயற்கையான ஒன்று என்று உணா;த்த சாதிய பாகுபாடுகள் அற்ற சங்கக்காலத்தில், காதலித்தற்காக எந்தவொரு ஆண்மகனும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டதற்கான சான்றுகள் இல்லை. ஆனால் பெண்ணை மட்டும் வீட்டுக்காவலுக்கு உட்படுத்தியுள்ளனர்.

பார்க்க, பேச காதலை வெளிப்படுத்த, பயணம் செய்ய, மறுமணம் உள்ளிட்ட கட்டுப்பாடுகள் யாவும் பெண்களின் மீதே திணித்திருப்பது வன்முறையேயன்றி வேறில்லை.

**தொகுப்புரை**

- சிறு வயது முதலே ஆண்மகனை உரிமைக்காக போராடும் வீரனாகவும் பெண்ணை அழகும், மடப்பமும் பொருந்திய அலங்காரப் பதுமையாகவும் காட்டு வந்ததுடன் அவ்வாறே ஊக்குவிப்பதாகவே இலக்கியங்களும் அமைக்கப்பட்டிக்கிறது.
- ஆண், பெண் இருவருடையே கடமைகளும் சமமானவை எனத் தொல்காப்பியம் காட்டவில்லை.
- அன்பின் ஐந்திணைப் பாடும் சங்க இலக்கியங்களில் கூட பெண்ணில் காதல் வரம்புக்கு உட்பட்டதாகவே கூறப்படுகிறது.
- பெண்ணுக்கு மறுமணம் செய்து கொள்ளும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.
- பெண்கள் கணவனின் இறப்பிற்கு பின் தன் உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டும். அல்லது கைம்மை நோன்பு மேற்கொள்ள வேண்டும் என்கிற நிலை இருந்துள்ளது.
- பெண்கள் போh;களில் நேரடியாகக் கலந்துக்கொள்வதிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள்.
- பரத்தையார் ஒழுக்கம் கண்டிக்கப்படாமல் இருந்திருக்கின்றது.
- சங்கக்கால மகளிhpன் அதிகாரம் கணவனை பொறுத்தமட்டில் மட்டுப்படுத்தப்பட்டு ஆணுக்கு பெண் கட்டுப்பட்டவர்களாக கிடக்கிறார்கள்.
- சங்கக் காலத்தில் ஆண் பெண் சமத்துவம் நிலவியதாகத் திடமாக கூறமுடியாமல் இருக்கிறது.

**முடிவுரை**

சங்க காலம் பொற்காலம் என்றே நாம் சொல்லக் கேட்டு வந்திருக்கிறோம். ஆனால் அதற்கு சற்றே முரண்பட்ட நிலையில் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களின் வாயிலாக சங்ககாலத்தில் ஆண்களுக்கு இருந்த சுதந்திர எல்லையில் பெண் மட்டுப்படுத்தப்பட்டு வரம்புக்கு உட்பட்டவளாகவே தனது வாழ்வினை நகர்த்தி வந்திருகிறார்கள்.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியம், களவியல், நூற்பா - 8
2. மேலது, நூற்பா - 5
3. தொல்காப்பியம், உவமயியல் - நூற்பா - 26
4. மேலது, நூற்பா - 28
5. தொல்காப்பியம், அகத்திணையியல், நூற்பா - 37
6. தொல்காப்பியம், கற்பியல், நூற்பா - 34
7. குறுந்தொகை. பாடல் - 135 : 1-2
8. தொல்காப்பியம், களவியல், நூற்பா - 23
9. கலித்தொகை - பாடல் - 114 : 20-21
10. தொல்காப்பியம், புறத்திணையியல் - நூற்பா - 18 : 22-23
11. மேலது, நூற்பா 18:29
12. மேலது, நூற்பா : 18 :30
13. மேலது, நூற்பா : 18 : 24-25
14. மேலது, நூற்பா: 18 : 16 -17
15. புறநானூறு, பாடல் - 246
16. குறுந்தொகை, பாடல் - 9
17. மேலது, பாடல் - 58
18. புறநானூறு, பாடல் - 85